# சேமிப்பின் அவசியம்

மனிதனின் அன்றாட வாழ்வில் பணம் முக்கிய பங்கு வகிக்கிறது. பணம் இல்லாதவர் பிணத்துக்குச் சமம்; பணம் பத்தும் செய்யும் எனும் பழமொழிகள் பணத்தின் அத்தியாவசத்தை வலியுறுத்துகிறது. தற்போதைய காலத்தில் பணம் நமது ______________________ வகிக்கிறது. இறைவனின் படைப்பான சிற்றறிவு உயிரினங்கள்கூட தங்களுக்கு வேண்டிய உணவைச் சேமித்து வைக்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளன. ______________________ நாம் சேமிப்பின் அவசியத்தினை அறிந்து செயல்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

______________________ வைக்கும் பணமானது நமக்குத் தேவைப்படும் போது பயன்படும். மாணவர்கள் தங்களுக்குத் தேவையான பள்ளிப்புத்தகங்கள், பொது அறிவை - ______________________ சேமிப்புப் பணம் உதவும். பள்ளிக் கட்டணம், உயர்கல்வியைத் தொடர்வதற்கும் சேமிப்பு கைகொடுக்கும். மேலும், பட்டமளிப்பு நிகழ்விற்குச் செலவு செய்வதற்கும் சேமித்து வைத்த தொகை பேருதவியாக அமையும்.

______________________ பெற்றோருக்குத் துணை நிற்பது அவர்கள் சிறுகச் சிறுக சேமித்தப் பணமே என்றால் அது மிகையாகாது. உதாரணத்திற்கு மருத்துவச் செலவிற்கான தொகை, குடும்ப உறுப்பினரின் இறப்பு, திருமணம் போன்ற சடங்குகளுக்குச் சேமிப்பு மிக அவசியமாகும். ______________________ வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்லவும் சேமிப்பே கைக்கொடுக்கும். மாத வருவாயில் அனைத்து செலவுகளையும் ஈடுகட்ட முயல்வது முயற்கொம்பாகும்.

மனிதன் பிறக்கையில் ______________________ சேர்ந்து பிறக்கின்றன. வீடு, வாகனம், சொத்து வாங்குதல் அவற்றுள் அடங்கும். நன்மனம் படைத்தவர் பிறருக்கு உதவ, நன்கொடை கொடுக்க நினைப்பர். அச்சமயத்தில் ______________________ அவருக்குத் துணை நிற்கும்.

'மழை வருமுன் குடைபிடி', 'வெள்ளம் வருமுன் அணைபோடு' எனும் பழமொழிக்கேற்ப நமது ______________________ தொடக்கத்திலிருந்தே வங்கியில் சேமிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். இச்சேமிப்புப் பழக்கத்தினை ______________________ சிறந்தது. 'தன் கையே தனக்கு உதவி' என்பதற்கேற்ப நாம் சேமித்தப் பணத்தில் வாழ்க்கையை வழி நடத்திச் செல்வது சாலச் சிறந்தது.

விடைகள்

| | |
|---|---|
| ஆறறிவு படைத்த மனிதர்களாகிய | வளர்க்கக்கூடிய புத்தகங்களை வாங்குவதற்குச் |
| பலதரப்பட்ட ஆசைகளும் அவனுடன் | விடுமுறை காலங்களில் தங்கள் பிள்ளைகளை |
| தக்க நேரத்தில் நாம் சேமித்து | அவர் வங்கியில் சேமித்தப் பணமே |
| ஆபத்து அவசர காலங்களில் | இளம் பிராயத்திலேயே தொடங்குவது |
| அன்றாடத் தேவைகளில் முதன்மை | எதிர்கால வாழ்க்கை சிறந்து விளங்க |

LIVEWORKSHEETS